# இராணுவ ஆட்சியை நோக்கி சிறிலங்கா

**மணிவாசகன்**
*(ஒரு பேப்பருக்காக )*



தெற்காசியப் பிராந்தியத்தின் அமைதி வலயமாய் இருந்த இலங்கை சிங்களத் தலைவர்களின் இனவெறி காரணமாய் யுத்த பூமியாக மாறியிருப்பது அனைவரும் அறிந்ததே.

தமது ஆட்சியைத் தக்க வைப்பதற்கு இனவாதத்தை ஊட்டி இராணுவ மயப்படுத்தலை படிப்படியாக அதிகரித்து வந்த சிங்கள அரசுகள் வளர்த்த கடா மார்பில் பாய்ந்த கதை என்ற சொற்தொடரின் அர்த்தத்தை உணர்ந்துகொள்ளும் நிலை ஒருநாள் வரும் என்பது அனைவரும் எதிர்பார்த்ததே.

ஆனால் அந்தநாள் மிகவும் நெருங்கி விட்டதோ என்று எண்ணும் விதமாய் காரியங்கள் நடந்தேறிக் கொண்டிருக்கின்றன.

கடைசியாய் சிங்களம் முகம் குப்புற வீழ்ந்த முகமாலைத் தாக்குதலின் பின்னர் பாதுகாப்பு அமைச்சிலிருந்து கசிந்த ஒரு தகவலின் படி இந்தத் தாக்குதலிற்காக இராணுவத் தளபதி பாதுகாப்பமைச்சின் அனுமதியைப் பெற்றிருக்கவில்லை என்பதாகும்.

அதே போல கடந்த ஞாயிறு வெளியான சில சிங்கள வாரப் பத்திரிகைகளில் முகமாலைத் தாக்குதல் தோல்விக்கு பாதுகாப்பு அமைச்சு சரியான விதத்தில் ஒத்துழைக்காமையே காரணம் என இராணுவத் தலைமை கருத்துத் தெரிவித்ததான விடயமும் பிரசுரிக்கப் பட்டிருந்தது.

இவை மிக மிகச் சிறிய விரிசல்களே என்ற போதிலும் இந்த விரிசல்கள் பூதாகாரமாக மாறி அதன் மூலம் இலங்கை இராணுவ ஆட்சிக்கு உட்படக் கூடிய சாத்தியங்கள் மிக அதிகமாகவே காணப்படுகின்றது.

இது வெறும் ஊகங்களிலாலான சந்தேகம் மட்டுமல்ல என்பதை சிறிலங்கா அரசியலை உன்னிப்பாக அவதானித்து வருபவர்களால் உணர்ந்து கொள்ள முடியும்.

கடந்த முப்பது முப்பத்தைந்து ஆண்டுகளாக தமிழின அழிப்பு யுத்தத்திற்காக சிங்களம் எடுத்து வைத்த அடிகளின் மூலம் ஆசியப் பிராந்தியத்தில் ஏன் சர்வதேச அளவிலேயே மிக வேகமாக இராணுவ மயப்படுத்தப்பட்ட நாடு சிறிலாங்காவாகத் தானிருக்க முடியும்.

குருவி தலையில் பனங்காய் என்பது போல ஆளணி ரீதியாக தனது சக்திக்கு மீறிய பாதுகாப்புப் படையினரைக் கொண்டிருக்கும் நாடாக சிறிலங்கா மாறியுள்ளது.

குறிப்பாக பிராந்திய வல்லரசுகளான சீனாவின் படை வலு மொத்த சனத்தொகையில் 0.5 வீதமாகும்

அதே போல இந்தியாவின் படை வலு (ஆளணி) மொத்த சனத்தொகையில் 0.3 வீதமாகும.

அடிக்கடி இராணுவ ஆட்சிக்கு உள்ளாகும் பாகிஸ்தானில கூட படை ஆளணி வலு 0.37 சத வீதமே.

ஆனால் சிறிலங்காவில் இது 1.2 வீதமாகக் காணப்படுகிறது. அதாவது நூறு பேரில் ஒருவர் படையில் பணிபுரிகிறார்.

ஆளணி வலு ரீதியாக மட்டுமன்றி அதிகார ரீதியாகப் பார்த்தால் கூட சிறிலங்கா இராணுவத்திற்கு அளவு கடந்த அதிகாரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. 1983ம் ஆண்டிற்குப் பின்னர் பெரும்பாலான காலப்பகுதி அவசர காலச் சட்டத்தின் கீழ் ஆளப்படுவது இந்த அதிகாரங்களை மேலும் அதிகரித்திருக்கிறது.

வடக்குக் கிழக்குப் பகுதிகளில் கடந்த 30 ஆண்டுகளாக சிவில் நிர்வாகம் முடக்கப்பட்ட நிலையில் இராணுவமே குரூர ஆட்சியை நடத்திவருகிறது. ஒவ்வொரு பிராந்தியத் தளபதிகளும் குறுநில மன்னர்கள் போல தம்மிஸ்டப்படி சட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றனர்.

இவ்வாறு அரச போகத்தை அநுபவித்து வரும் இராணுவத் தளபதிகளுக்கு முழு நாட்டையும் கட்டி ஆளும் ஆசை வராது என்று சொல்லி விட முடியாது.

இந்த அபாயத்தை சிங்கள அரசியல்வாதிகளும் உணராமல் இல்லை. அதனால் தான் இராணுவத் தளபதி நிலையில் தமது உறவினர்களை அல்லது மிகவும் நெருக்கமானவர்களை அமர்த்தி அவர்கள் ஓய்வு பெறும் வயதைத் தாண்டிய பின்னரும் பதவி நீடிப்புக் கொடுத்து வைத்திருப்பதையே வழக்கமாய் வைத்திருக்கின்றனர். ஜே. ஆர் ஜெயவர்த்தனாவிலிருந்து மஹிந்த ராஜபக்ச வரை இந்த தந்திரத்தையே கையாண்டு வருகின்றனர்.

ஆனால் பதவி ஆசை என்பது உறவுகள் நட்பு என்பவற்றை கடந்தது என்பது ஒன்றும் இரகசியமல்ல.

அந்த வகையில் சரத் பொன்சேக்கா 'எனது பதவிக் காலத்தில் புலிகளை ஒழித்துக் கட்டுவேன்' என்று சவால் விடுப்பது புலிகள் விரைவில் அழிந்து விடுவார்கள் என்ற அர்த்தத்திலா அல்லது தனது பதவிக் காலம் இப்போதைக்கு முடியப் போவதில்லை என்ற அர்த்தத்திலா என்று தெரியவில்லை.

இதே வேளை தனது ஆட்சிக்கு ஆபத்து ஏற்படும் பட்சத்தில் இராணுவ ஆட்சி ஒன்றை தோற்றுவிப்பதற்கு மஹிந்த அரசாங்கமே ஆசீர்வாதமளித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து பிரிந்து அரசுடன் இணைந்துள்ள உறுப்பினர்கள் சிலர் மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைய முயற்சித்த போது மஹிந்தவிற்கு மிகவும் நெருக்கமானவரும் அவரின் ஆலோசகராகச் செயற்பட்டு வருபவருமான டலஸ் அளகப்பெரும மஹிந்தவின் அரசு கலைக்கப்படும் சூழல் உருவானால் இராணுவ ஆட்சியே எற்படும் என்றும் ஐக்கிய தேசியக் கட்சி மீண்டும் ஆட்சிக்கு வர இடமளிக்கப் போவதில்லை என்றும் மிரட்டியதாக செய்தி கசிந்திருந்தது.

ஆக அரசின் ஆசீர்வாதத்துடனோ அரசிற்கே தெரியாமலோ சிறிலங்கா இராணுவ ஆட்சிக்கு உள்ளாகக் கூடிய வாய்ப்புகள் அதிகமாகவே உள்ளன.

இதே வேளை பாகிஸ்தானின் இராணுவ ஆட்சியாளர் முசாரப்பும் சரத் பொன்சேக்காவும் இராணுவக் கல்லூரியில் ஒன்றாகக் கற்றவர்கள் என்பதும் பொன்சேக்காவும் முசாரப்பும் தொடர்ந்து தமது நட்பைப் பேணி வருபவர்கள் என்பதும் தற்போதும் பொன்சேக்கா பாகிஸ்தானிற்கு விஜயம் செய்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது

**அகதி நிலை**
**ஆரம்ப முதல் இறுதி**
**விண்ணப்பம்**

- அகதி நிலை தடுப்புக்காவல்/பிணை விடுவிப்பு/மேன்முறையீடு
- ஐக்கிய இராச்சிய/உள்வரவு அனுமதி/விசா விண்ணப்பம்
- தொழில் முறை மற்றும் மாணவர் விசா விண்ணப்பம்
- ஐக்கிய இராச்சிய பிரஜாவுரிமை/தேசியம்
- வதிவிட உரிமை/நீண்டகாலம் தங்கியுள்ளோர் விண்ணப்பம்
- வேலை செய்யும் விடுமுறை விண்ணப்பம்;
- உயர்தரத் திறமை குடிவரவுத் திட்டம்
- ஐரோப்பிய ஒன்றியம்/ ஐரோப்பிய ஒன்றியம் பொருளாதாரப் பிரதேச, சுவிஸ் நாட்டு குடும்ப அங்கத்தவர் பதிவு.
- தங்கியுள்ளோர்/உறவினர் விடுமுறை/வதிவிட விண்ணப்பம்

பல் வேறுபட்ட குடிவரவு தொடர்பான விடயங்களில் பல வெற்றிகரமான சேவையினை ஆற்றிவரும் எமது நிறுவனம், தனது சேவையை புதிய இடத்தில் ஆரம்பிக்கிறது. உங்களது பிரச்சினைகளை இலகுவாக இனம்கண்டு, சரியானதும், விரைவானதுமான தீர்வுகான நாடுங்கள்.

**Gerald & Co.**
*Professional Immigration & Legal Consultants*
www.brit-immigration.org.uk

**Asylum Applications/ Fresh applications, Advice on UK Asylum/interview procedures.**

- Entry Clearance/Visa applications
- Leave to remain applications
- FLRO, SET(O), SET(F)
- Certificate of Approval (COA) Marriage
- Student Visa Applications
- EU/EAA Applications
- EEA Registration Certificates
- Setting up Business/Visa
- Working Holiday Maker Visas
- Asylum Applications
- Detention & Bail
- Appeal Matters
- Reconsideration Appeals
- Humanatarian Protection / Discretionary leave
- HSMP Visas/Work permit visa
- Visa extensions - in country
- Spouse & Dependent relative visas
- Nationality/Citizenship. (Life in UK Classes)

**Gerald & Co.**
Contact:
**Mrs Suresh**
OISC registered Immigration Advisor

T: **020 8646 4800** F: **020 8665 2399** M: **07932 790 650**
E: gs@brit-immigration.org.uk
64 London Road, Morden, Surrey, SM4 5BE